ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2295/57 - 2022 සැප්තැම්බර් මස 03 වැනි සෙනසුරාදා - 2022.09.03

2295/57 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: KDS/PAN/04/04/02/21.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/8/2013/PC/518.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பன்வில பிரதேச செயலாளர் பிரிவில், இல. 738 கோமரய கிராம அலுவலர் பிரிவில், கோமரய கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் இல.மு.பி.மஹ 6890 கொண்ட 2019.01.12 ஆந் திகதிய அடிப்படை வரைபடத்தில் குறிப்பிடப் பட்டுள்ள கீழ் குறிப்பிடப்படும் விபரங்களும் மற்றும் எல்லைகளைக் கொண்ட காணி.

**1. துண்டு இல. 1; காணியின் பெயர்: கோமரய தோட்டம்; உரிமை கோருவோர்: அரச பெருந் தோட்டக் கூட்டுத்தாபனம், இல. 21, மீரானியா வீதி, கொழும்பு 12; விஸ்தீரணம்: 1.1172 ஹெக்டயார்.**

வடக்கு: அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் உரிமை கோரும் கோமரய தோட்டம்; கிழக்கு: அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் உரிமை கோரும் கோமரய தோட்டம் மற்றும் இந்த வரிப்படத்தின் காணித்துண்டு இல. 3; தெற்கு: காணித்துண்டு இல. 3, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் உரிமை கோரும் கோமரய தோட்டம் மற்றும் காணித் துண்டு இல. 2; மேற்கு: காணித்துண்டு இல. 2, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் உரிமை கோரும் கோமரய தோட்டம்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி பி.ப. 02.00 மணிக்கு பன்வில பிரதேச செயலகத்தில் என் முன்பாக தோன்றும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நிரஞ்சன் ஸ்ரீமந்த சேனாதீர,
பிரதேச செயலாளர்,
பன்வில பிரிவு.

பிரதேச செயலகம்,
பன்வில,
2022, ஓகத்து 29.

EOG 09 - 0036

---

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு
இல.: 4-3/05/2018/HA/454.
பிரதேச செயலாளர் குறிப்பு இல.: பென்/2/7/3/29.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2022.04.01 ஆந் திகதிய 2273/84 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள காணி எடுத்தச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் காட்டப்பட்டுள்ள காணி உரித்து விசாரணை பற்றிய விபரங்கள் பின்வருமாறு திருத்தப்படுகின்றது என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற விசாரனை 2022.04.27ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அத்திகதி 2022.10.19 என திருத்தப்பட்டுள்ளது.

அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற் கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பந்துல பிரதிராஜ் அபேசேகர,
பிரதேச செயலாளர்,
பென்தோட்டை.

பிரதேச செயலகம்,
பென்தோட்டை,
2022, ஓகத்து 29.

EOG 09 - 0037

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.